பக்கங்கள் 18

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | கார்த்திகை 30 ஞாயிற்றுக்கிழமை 15.12.2024 | அதிர்வு 135

## பருத்தித்துறையில் எலிக்காய்ச்சல் தாக்கம் வெகுவாகக் குறைவு

(எஸ்.ரகுதீஸ்)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் எலிக்காய்ச்சல் எனச் சந்தேகிக்கப்பட்டு சேர்க்கப்படுபவர்களின்

06▶




# தமிழரசில் இருந்து சிலர் விரைவில் நீக்கப்படுவர்

## மேலும் சிலர் இடைநிறுத்தப்படுவர் எனவும்

## முன்னாள் எம்.பி. சுமந்திரன் கூறுகின்றார்

(கி.வசந்தன்)

"இலங்கைத் தமிழரசுக் கட்சியில் இருந்து சிலர் நீக்கப்படுவார்கள். சிலர் இடைநிறுத்தப்படுவார்கள்."

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக்கட்சியின்முன்னாள்நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கட்சிக்கு எதிராகப் போட்டியிட்டவர்களை உடனடியாகக் கட்சியிலிருந்து நீக்குவதற்குப் பொதுச் செயலாளருக்கு அதிகாரம் இருக்கின்றது என மத்திய குழு ஏற்றுக் கொண்டிருக்கின்றது. அதனைப் பொதுச்செயலாளர் எதிர்வரும் நாட்களில் செய்வார்.

06▶

# விலகிச் செயற்பட்டவர்களைக் கட்சியில் இருந்து நீக்குவதாக ஏகமனதாகத் தீர்மானிக்கவில்லை!

## இப்படிச் சொல்கின்றார் ஸ்ரீநேசன் எம்.பி

(கி.வசந்தன்)

"கடந்த தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியில் இருந்து விலகிச் செயற்பட்டவர்களைக் கட்சியில் இருந்து நீக்குவதாக ஏகமனதாகத் தீர்மானிக்கவில்லை."

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளு–மன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தின் பின் ஊடகங்களுக்குக்

06▶






'சாமி வரங் கொடுத்தாலும் பூசாரி வரங் கொடுக்க மாட்டார்' என்பார்கள். அது வடக்கு கிழக்கிற்கு மிகப் பொருத்தமான பழமொழி என்பதனை எமது அதிகாரிகள் அடிக்கடி நிரூபிக்கின்றனர்.

நல்லாட்சி அரசில் யார், யாரினதோ காலைப் பிடித்து யாழ்ப்பாணத்திற்கும் மூலோபாய அபிவிருத்தித்

06▶




# தையிட்டியில் போராட்டக்காரர்கள் - பொலிஸார் முறுகல்!

யாழ். தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட விகாரையை அகற்றக் கோரி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் நேற்றும் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது அந்தக் கட்சியினருக்கும் பொலிஸாருக்கும் இடையே முறுகல் போக்கு ஏற்பட்டது.

இதனால் அங்கு பதற்றமான சூழல் நிலவியது. அத்தோடு, பொலிஸார் வீதித் தடைகளை ஏற்படுத்தி குவிக்கப்பட்டனர்.

இந்தப் போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

தையிட்டியில் தமிழ் மக்களின் காணிகளை இராணுவம் ஆக்கிரமித்து வைத்திருந்தபோது உரிய அனுமதிகள் எதுவுமின்றி சட்டவிரோதமாகக் கட்டப்பட்டுள்ள திஸ்ஸ விகாரை கட்டுமானத்தை அகற்றி, காணிகளை உரிமையாளர்களிடம் கையளிக்க வேண்டும் என வலியுறுத்தி தொடர்ந்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.





# ஏப்ரலில் உள்ளூராட்சி தேர்தல்! செப்டெம்பரில் மாகாண சபை!!

## அநுர அரசு தீர்மானம்



அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் உள்ளூராட்சி சபைத் தேர்தலையும், செப்டெம்பர் மாதம் மாகாண சபைத் தேர்தலையும் நடத்த ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான அரசு திட்டமிட்டுள்ளது என்று கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அந்த ஊடகம் வெளியிட்டுள்ள செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அடுத்த வருடம் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல் மற்றும் மாகாண சபைத் தேர்தலுக்கான திகதிகளை அரசு தீர்மானித்துள்ளது என்று நம்பகரமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி, ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சி சபைத் தேர்தலின் வேட்புமனுக்களை இரத்துச் செய்து புதிய வேட்புமனுக்களைக் கோரும் வகையில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஏப்ரல் மாத தொடக்கத்தில் நடத்தவும், 7 ஆண்டுகளுக்கும் மேலாகத் தாமதமாகி வரும் மாகாண சபைத் தேர்தலை அடுத்த வருடம் செப்டெம்பர் மாதம் நடத்தவும் அரசு திட்டமிட்டுள்ளது.

இது தொடர்பான சட்ட நடவடிக்கைகளை விரைந்து முடிக்கத் தேவையான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகின்றது எனவும் கூறப்படுகின்றது. - என்றுள்ளது.

# தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கத்தின் நினைவேந்தல் நிகழ்வு கிளிநொச்சியில்









தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கத்தின் 18 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று கிளிநொச்சியில் நடைபெற்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டப் பணிமனையான அறிவகத்தில், மாவட்டக் கிளையின் செயலாளர் வீரவாகு விஜயகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த அஞ்சலி நிகழ்வில், கட்சியின் உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# செவ்வாயன்று புதிய சபாநாயகர் தெரிவு! மூன்று பேரின் பெயர்கள் முன்மொழிவு!!

சபாநாயகர் பதவியில் இருந்து தாம் விலகுவதாக அசோக ரன்வெல நேற்றுமுன்தினம் அறிவித்த நிலையில் புதிய சபாநாயகர் தெரிவு நடைபெறவுள்ளது.

புதிய சபாநாயகரை அடுத்த நாடாளுமன்ற அமர்வின் முதல் நாளில் தெரிவு செய்ய வேண்டும் என்று நாடாளுமன்ற பிரதி பொதுச்செயலாளர் சமிந்த குலரத்ன தெரிவித்துள்ளார்.

அதன்படி நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை புதிய சபாநாயகர் தெரிவு இடம்பெறவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

புதிதாகத் தெரிவு செய்யப்படவுள்ள சபாநாயகர் தொடர்பில் சர்ச்சை எழுந்தால் அன்றைய தினம் வாக்கெடுப்பு நடத்தப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, புதிய சபாநாயகர் பதவிக்கு மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் முன்மொழியப்பட்டுள்ளன என்று அரச தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பிரதிச் சபாநாயகர் றிஸ்வி சாலி, நாடாளுமன்ற உறுப்பினர்களான நிஹால் கலப்பதி, லக்ஷ்மன் நிபுன ஆராச்சி ஆகியோரின் பெயர்களே முன்மொழியப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும், இது தொடர்பான இறுதித் தீர்மானம் இன்னும் எடுக்கப்படவில்லை எனவும், இன்று அல்லது நாளை இறுதி முடிவெடுக்கப்படும் எனவும் தெரியவருகின்றது.

# யாழில் இராணுவத்தினரின் பிடியிலுள்ள நிலங்கள் படிப்படியாக விடுவிக்கப்படும்!

## அமைச்சர் சந்திரசேகர் உறுதி

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இராணுவத்தின் பிடியில் காணப்படும் 2 ஆயிரத்து 624.29 ஏக்கர் நிலப்பரப்பு எதிர்வரும் காலங்களில் படிப்படியாக விடுவிக்கப்படும் என்று கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,



"தற்போது படையினரிடம் உள்ள காணிகள் 2025ஆம் ஆண்டு முதல் படிப்படியாக விடுவிக்கப்படும். அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட மீள்குடியேற்றம் மற்றும் அபிவிருத்தி திட்டங்களுக்காக இந்த வருடம் ஆயிரத்து 303.42 மில்லியன் ரூபா நிதி செலவழிக்கப்பட்டுள்ளது." – என்றார்.

# வவுனியா பொருளாதார நிலையம் உடனடியாகத் திறக்கப்பட வேண்டும்

## விவசாயிகள் கோரிக்கை





(வவுனியா நிருபர்)

வவுனியா பொருளாதார மத்திய நிலையம் கடந்த ஆறு ஆண்டுகளுக்கு மேலாகப் புதிதாக அமைக்கப்பட்டு திறக்கப்படாத நிலையில் காணப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், இந்தப் பொருளாதார மத்திய நிலையத்தைப் பகிரங்க கேள்வி கோரல் மூலமாக வழங்கி அதனைச் செயற்படுத்த வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

குறிப்பாக 295 மில்லியன் ரூபா செலவில் அப்போதைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஊடாக அமைக்கப்பட்ட குறித்த பொருளாதார மத்திய நிலையம் வவுனியா மாவட்ட விவசாயிகளுக்கு நன்மை பயக்கும் வகையிலும் அமைக்கப்பட்டிருந்தது.

ஓமந்தையில் அமைப்பதா? தாண்டிக் குளத்தில் அமைப்பதா? என்று அரசியல்வாதிகளின் பல்வேறு இழுபறிகளுக்கு மத்தியில் மூன்றுமுறிப்பு பகுதியில் அமைக்கப்பட்ட குறித்த பொருளாதார மத்திய நிலையமானது இதுவரை திறக்கப்படாத நிலையில் கட்டடம் சேதமடையும் நிலையில் காட்சியளித்து வருகின்றது.



இந்நிலையில், குறித்த பொருளாதார மத்திய நிலையத்தைப் பகிரங்க கேள்வி கோரலூடாக வழங்கும் பட்சத்தில் விவசாயிகள் நியாயமான விலைக்கு தமது உற்பத்திப் பொருட்களை வழங்க முடியும் எனத் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, தற்போது வவுனியாவில் உள்ள மொத்த மரக்கறி கொள்முதலாளர்கள் சர்வாதிகாரப் போக்கோடு செயற்படுகின்றனர் எனவும், 10 வீதம் என்ற தரகுப் பணத்தைப் பெரும் நிலை காணப்படுவதோடு சில வேளைகளில் பொருட்கள் விற்பனை செய்யப்படவில்லை என விவசாயிகளிடம் பணம் வழங்கப்படாத நிகழ்வுகளும் சம்பவிக்கின்றது.

எனவே, பகிரங்க கேள்விக்கோரலுக்கு உட்படுத்துகின்ற போது விவசாயிகளின் பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்கும் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் விவசாய அமைச்சரும் புதிய அரசும் ஆவன செய்ய வேண்டும் எனவும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தமிழ் டயஸ்போராக்களுக்கு ஏற்ப இயங்குகின்றது அநுரகுமார அரசு

## மஹிந்தவின் பாதுகாப்பு குறைக்கப்பட்டுள்ளமைக்கு எதிராக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன போர்க்கொடி




“தமிழ் டயஸ்போராக்களுக்குத் தேவையான அனைத்துக் கோரிக்கைகளையும் இந்த அரசு நிறைவேற்றி வருகின்றது. ஆதலால்தான் மஹிந்தவின் பாதுகாப்பு தற்போது குறைக்கப்பட்டுள்ளது.”

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.

அந்தக் கட்சியின் உறுப்பினரான சட்டத்தரணி மனோஜ் கமகே இது தொடர்பில் ஊடகங்களிடம் தெரிவித்ததாவது:-

“மஹிந்த ராஜபக்ஷவுக்கு பாதுகாப்பு வழங்கி வந்த 116 பாதுகாவலர்கள் ஒரே தடவையில் நீக்கப்பட்டுள்ளனர். பாதுகாப்பு மீளாய்வின்றியே இதற்குரிய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. எனவே, இந்தப் பாதுகாப்புக் குறைப்பின் பின்னணியில் மஹிந்த ராஜபக்ஷவைக் கொலை செய்வதற்குரிய சூழ்ச்சித் திட்டம் உள்ளதா? என்ற சந்தேகம் எமக்கு உள்ளது.

மஹிந்த ராஜபக்ஷவுக்குப் பாதுகாப்பு வழங்கி வந்த உணவுப் பரிசோதகர்கள்கூட நீக்கப்பட்டுள்ளனர். உலகில் உணவில் விஷம் கலந்து தலைவர்களைக் கொலை செய்த சம்பவங்கள் பல இடம்பெற்றுள்ளன. இவ்வாறானதொரு பின்னணியில் உணவுப் பரிசோதகர்கள் மற்றும் பாதுகாப்பாளர்களை உடன் நீக்கியமைக்குக் காரணம் என்ன? என்று அரசைக் கேட்கின்றோம்.

கனடாவில் இருந்து செயற்படும் தமிழ் டயஸ்போராக்களின் அனைத்து கோரிக்கைகளையும் இந்த அரசு நிறைவேற்றி வருகின்றது. வடக்கு, கிழக்கில் முகாம்கள் அகற்றப்படுகின்றன. மஹிந்தவின் பாதுகாப்பு நீக்கப்படுகின்றது. இது டயஸ் போராக்களின் தேவைக்காக நடக்கின்றது.

மஹிந்த ராஜபக்ஷவைக் கொல்வதற்குரிய களம் அமைத்துக் கொடுக்கப்படுகின்றதா? மஹிந்த ராஜபக்ஷவுக்கு பாதுகாப்பு அவசியம். எனவே, பாதுகாப்பைக் குறைக்கும் திட்டத்தை இந்த அரசு மீளப்பெற வேண்டும்.” – என்றார்.



# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**விலகிச் செயற்பட்டவர்களை...**

கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இன்று (நேற்று) நடைபெற்ற கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் பல விடயங்கள் இருந்தன. ஆனாலும், ஒரு விடயம் ஆராயப்பட்டது. தமிழரசுக் கட்சித் தலைவரின் பதவி விலகல் கடிதம் தொடர்பாக வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன. அந்தக் கடிதத்தை மாவை சேனாதிராஜா ஐயா அனுப்பியதன் பின்னர் பதவி விலகல் கடிதத்தில் இருந்து வாபஸ் பெறுவதாகச் சொல்லியிருந்தார். மீண்டும் தலைவராக இருப்பதற்கான சம்மதத்தைத் தெரிவித்து இருந்தார். அது தொடர்பாக எமது கட்சி உறுப்பினர்கள் மத்தியில் இரண்டு கருத்துக்கள் இருந்தன. அதன் அடிப்படையில் அவர் பதவி வகிக்க வேண்டும் என்ற ஒரு கருத்தும், கடிதம் கொடுத்ததன் பிரகாரம் பதவியில் இருந்து விலக வேண்டும் என்ற ஒரு கருத்தும் இருந்தது.

ஒரு ஜனநாயகக் கட்சி என்ற அடிப்படையில் அந்த வாதப் பிரதிவாதங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றன. தீர்க்கமான முடிவு எடுக்க முடியாத நிலையில் இரு தரப்பு கருத்துக்களும் இருந்தன. ஜனநாயக ரீதியாக இதனைப் பார்க்க வேண்டியிருந்தது. இதனால் பதவி விலகலை உடனடியாக ஏற்றுக்கொள்ளவில்லை. கூட்டத்தை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை ஒத்திவைத்து மீண்டும் கூட்டத்தைக் கூட்டி தலைவர் யார் என்று முடிவெடுப்பதாகத் தீர்மானிக்கப்பட்டது.

தேர்தலில் ஏற்பட்ட பின்னடைவு குறித்தும் ஆராயப்பட்டது. குறிப்பாக வடக்கு மாகாணத்தில் ஏற்பட்ட பின்னடைவு பற்றி பேசப்பட்டது. இதற்குப் பதவி விலகல் ஒரு காரணம் என்று சொல்லப்பட்டாலும் இன்னும் பல காரணங்கள் இருந்தன. அதனைச் சுயாதீனமான, நடுநிலையான ஆய்வு குழு மூலம் ஆராய்ந்து அறிக்கைப் படுத்திய பின்னர்தான் கருத்துக் கூற முடியும்.

ஒவ்வொருவரது கருத்துக்களும் சுயம் சார்ந்து இருக்கின்றன. ஆய்வுக் குழு மூலம் அதனை மேற்கொண்டால் அது பயன் உள்ளதாக அமையும்.

தமிழரசுக் கட்சியின் தலைவர் விடயம் முக்கியம் பெற்று இருந்தமையால வேறு விடயங்கள் குறித்து பேச முடியாது போனது. இதற்கு விரைவில் முடிவு எடுத்துவிட்டு தமிழ் மக்களது பிரச்சினைகள் குறித்து பேச வேண்யுளளது.

கடந்த தேர்தலில் கட்சிகளில் இருந்து விலகி தேர்தலில் போட்டியிட்டவர்களுக்கு என்ன நடவடிக்கை எடுப்பது என்ற ஒரு கருத்தும் பேசப்பட்டது. சிலரது கருத்து அவர்களைக் கட்சி அங்கத்தவர் பட்டியலில் இருந்து நீக்கி விட வேண்டும் என்பதாக இருந்தது. இருந்தாலும் அந்தக் கருத்து ஏகமனதான கருத்தாக இருக்கவில்லை. அதிருப்தியின் காரணமாக வெளியேறிச் சென்றவர்களும் இருக்கின்றார்கள். அந்த அதிருப்திகளுக்கு என்ன காரணம் என்றும் ஆராய வேண்டியுள்ளது. ஆய்வுக் குழுவின் மூலம் முறையாக ஆய்வு செய்ய வேண்டும். அதன் பின் முடிவு எடுக்கப்படும்.

அத்துடன், நாடாளுமன்றக் குழுவில் என்னைப் பேச்சாளராக அறிவித்துள்ளார்கள். அதனால் எமது கட்சியின் கருத்தியல் பற்றி நான் சொல்ல வேண்டியுள்ளது. அதனை நான் செய்கின்றேன். கட்சிக் கூட்டக் கருத்துக்களையும், நாடாளுமன்றக் கருத்துக்களையும் வெளியிடுவது என்னுடைய பணியாக இருக்கும்." – என்றார்.

---

**இரகசியம் பரகசியம்...**

திட்டத்தின் கீழ் பெரும் தொகை நிதிக்கு நமது அரசியல்வாதிகளினால் அரசிடம் அனுமதி பெறப்பட்டது. அதற்காக யாழ் மாவட்டச் செயலகத்தில் தனியான அலுவலகத்தை ஆரம்பித்தபோது அப்போதைய அரச அதிபர் (தற்போதைய ஆளுநர்) தலையிடுகின்றார், நாம் சுயாதீனமாக செயல்பட்டால் விரைவாக செயல்படுவோம் எனக் கூறித் தனியான கட்டடத்தில் அலுவலகம் அமைத்து, ஐந்து வருடங்கள் அதிகாரிகள் செயல்பட்டனர். அங்கு கடைசியாக நடந்தேறியவற்றை நேரடியாக சொல்வதனால் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் தமக்கான சம்பளங்களைப் பெற்று பசியாறினர், அவ்வளவு தான். அதற்கு மேல் ஒரு திட்டமும் நடைமுறைப்படுத்தப்படாமல் நிதி முழுமையாகத் திரும்பிச் சென்றது.

நிதி திரும்பிச் சென்ற பின்னர் அதிகாரிகள் தங்களின் செயலின்மைச் சமாளிப்பதற்குச் சில நொண்டிச் சாட்டுகளைச் சொல்லத் தவறவில்லை. யாழில் எந்தவொரு புள்ளி விவரமும் இன்மையால் திட்ட அறிக்கைகள் தயாரிக்க முடியவில்லை என்று சாக்குப் போக்குச் சொல்லித் தங்கள் செயற்பாட்டை நியாயப்படுத்திக் கொண்டனர்.

இதனை ஏன் இப்போது குறிப்பிடுகின்றேன் என்ற கேள்வி வரலாம். ஆம், இதேபோன்றதொரு விடயம் மீண்டும் வடக்கில் இடம்பெறவுள்ளது. அது இம்முறை கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெறுகின்றது.

ரணில் அரசின் காலத்தில் பூநகரியில் மூன்று திட்டங்கள் ஒருங்கிணைந்த வகையில் அனுமதிக்கப்பட்டன. அதாவது பூநகரிப் பிரதேச நகர அபிவிருத்தி, ஞானிமடம் புனரமைப்பு, நெல் உலரவிடும் தளம் அமைத்தல் ஆகிய பணிகளுக்காக ஐம்பது கோடி ரூபா அனுமதிக்கப்பட்டு இப் பணிகள் நகர அபிவிருத்தி அதிகார சபையின் பொறுப்பில் விடப்பட்டுள்ளது. இவ்வாறு நகர அபிவிருத்தி அதிகார சபையின் பொறுப்பில் விடப்பட்ட பணி தற்போது ஒப்பேறாது என்கின்றனர் விடயமறிந்த வட்டாரங்கள். அதற்கான காரணத்தை தேடியபோது விடயம் தூக்கி வாரிப்போட்டது.

நிதி அனுமதி வழங்கப்பட்ட பின்பே திட்ட அறிக்கை தயாரித்தல், வரைபடங்கள் தயாரித்தல், ஏனைய பணிகள் என முன்கொண்டு செல்லப்படுவதனால் இதற்கான கால அவகாசமும் போதாமல் திட்டம் வருட இறுதியோடு கை நழுவிச் செல்லும் நிலையில் உள்ளதாகத் தகவல்.

கைக்கு எட்டியும் வாய்க்கு எட்டவில்லை என்று மனதுக்குள் நொந்து கொண்டு அமைதியாவதைத் தவிர வேறு வழியில்லை...!

---

**தமிழரசில் இருந்து...**

வேறு சிலர் கட்சிக்கும், கட்சியினுடைய வேட்பாளருக்கு எதிராகவும் செயற்பட்டமை தொடர்பிலும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும். அந்த ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் வரைக்கும் அவர்கள் கட்சியின் செயற்பாடுகளில் இருந்து இடைநிறுத்தப்படுவார்கள்.

கடந்த காலத்தில் அரசமைப்பு உருவாக்கம் சம்பந்தமான விடயங்களில் தமிழரசுக் கட்சி தீர்க்கமான நிலைப்பாடுகளை எடுத்திருக்கின்றது. சில வரைவுகள் செய்யப்பட்டு இருக்கின்றன. சில வரைவுகளோடு நாங்கள் இணங்கி இருக்கின்றோம். ஆகவே. அது எங்களுடைய நிலைப்பாடு.

அதனைத் தொடர்ந்து கோட்டாபய ராஜபக்ஷவினுடைய காலத்தில் அவர் நியமித்த குழுவுக்கு முன்பாகவும் நாங்கள் சென்று எங்களுடைய நிலைப்பாட்டை எழுத்து மூலமாகக் கொடுத்திருக்கின்றோம். ஆகவே, அது எங்கள் கட்சியினுடைய நிலைப்பாடு. ஆகவே, அவ்வாறான நிலைப்பாட்டோடு ஒத்து வருகின்றவர்கள் இருந்தால் எந்த ஆட்சேபனையும் கிடையாது.

ஆனால், வேறு சிலர் எங்களுடைய கட்சிக்குப் போட்டியாக வேண்டுமென்றே வெவ்வேறு வரைவுகளைச் செய்து சில குழப்பங்களை ஏற்படுத்தி இருக்கின்றார்கள். அவ்வாறான குழப்பங்களை அந்தக் காலப் பகுதியில் செய்தவர்களோடு, அவர்களுடைய வரைவுக்கு இணங்கிச் செல்ல வேண்டிய அவசியம் நமக்குக் கிடையாது.

தமிழரசுக் கட்சி தமிழர்களுடைய பிரதான கட்சி. வடக்கு, கிழக்கில் சகல மாவட்டங்களில் இருந்தும் பிரதிநிதிகளைத் தெரிவு செய்திருக்கின்ற ஒரே ஒரு கட்சி இலங்கைத் தமிழரசுக் கட்சி.

ஆகவே, மக்கள் கொடுத்த அந்த ஆணையை மீறிச் செயற்பட மாட்டோம். மற்றவர்கள் எங்களோடு எங்களுடைய நிலைப்பாட்டோடு இணைந்து செயற்படுவதற்கு வருவார்களாக இருந்தால் எமக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை." – என்றார்.

---

**பருத்தித்துறையில்...**

எண்ணிகை வெகுவாகக் குறைவடைந்துள்ளது.

ஓரிரு தினங்களில் வைத்தியசாலையில் சேர்க்கப்படுபவர்களின் எண்ணிக்கை குறைந்து நிலைமை சரியாகி விடும் என்று வைத்தியர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

"மக்கள் தற்போது முன்னெடுக்கப்படும் தடுப்பு நடவடிக்கைகளைப் பின்பற்ற வேண்டும். காய்ச்சல் அறிகுறிக்கான ஆரம்பத்திலேயே வைத்தியசாலைக்கு வர வேண்டும். சிகிச்சை எடுக்க வேண்டும். இதன்மூலம் நோய் தீவிரமாகுவதையும், இறப்பு ஏற்படுவதையும் தடுக்கலாம், குறைக்கலாம்.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இதுவரை 66 பேர் எலிக் காய்ச்சல் நோய் அறிகுறிகளுடன் வந்து சிகிச்சை பெற்றுள்ளார்கள். தற்போது 32 நோயாளர்கள் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெறுகின்றார்கள். அவர்களில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக நேற்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டார்." – என்றார்.

# அரச உத்தியோகத்தர்களுடன் அணுகுவதற்கு முறையுள்ளது!

## அர்ச்சுனா எம்.பியின் செயற்பாடு குறித்து சிறிதரன் எம் பி. கருத்து

(கி.வசந்தன்)

அரச அதிகாரிகளாக இருப்பவர்கள் எங்களை விட கல்வித் தரத்திலே கூடிய வர்களாகவும் இருப்பார்கள். எனவே அவர்களுடன் அணுகுவதற்கு முறை யுள்ளது என தமிழரசுக் கட்சியின் யாழ் மாவட்ட நாடா ளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்தார்.

வவுனியாவில் தமிழர் கட்சியின் மத்திய குழு கூட்டம் நேற்று இடம் பெற் றதன் பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது நேற்றைய தினம் (13.12.2024) யாழ்.மாவட்ட அபி விருத்திக் குழு கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் அர்சுனாவுக்கும், அரச உத்தியோகத்தர்களுக்கும் முரண்பாடு என வருகின்ற செய்தி தொடர்பில் ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக எவ்வாறு பார்க்கின்றீர்கள் என கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந் தும் கருத்து தெரிவிக்கையில் –

அரசு அதிகாரிகளாக இருப்பவர்கள் எங்களை விட கல்வித் தரத்திலே கூடிய வர்களாக இருக்கிறார்கள். அறிவு பூர்வமாக படித்துத்தான் அவர்கள் அந்த பதவிகளுக்கு வந்திருக்கிறார்கள். ஊடகவியலாளர்களுக்கும் எங்களை விட ஊடகத்துறையில் அனுபவம் கூடுதலாகவே இருக்கும். ஆகவே என் னைப் பொறுத்த வரைக்கும் நாங்கள் அவர்களை அணுகுவதற்கான முறை இருக்கிறது. மனிதாபிமானத்தையும், மனித மூலதனத்தையும் எவ்வாறு பயன்படுத்துவது என்பது தொடர்பில் நாங்கள் மிகவும் கண்ணியத்தோடும் பொறுப்போடும் நடக்க வேண்டும்.

எங்களுடைய கட்சி இதுவரை கால மும் அவ்வாறு தான் நடந்திருக்கிறது. தொடர்ந்தும் அந்த பொறுப்போடும், கண்ணியத்தோடும் அரச உத்தியோ கத்தர்களோடு அணுகி செயல்படுவோம். – என்றார்.




சபாநாயகரின் இராஜினாமா தொடர் பில் கேட்டபோது –

சபாநாயகராக இருப்பதற்கு கலாநிதி பட்டமோ எந்தவிதமான பதவி நிலை மைகளோ இருக்க வேண்டும் என்ற சட்டம் இல்லை. எனினும் அவர் தனது பெயருக்கு முன்பாக கலாநிதி என்ற பட்டத்தை பயன்படுத்தி இருக்கிறார். எனினும் அவர் அந்த பதவிக்கு உரியவர் அல்லர் என்று சிலர் அடையாளப்படுத்து வதன் காரணமாக பெருந்தன்மையோடு ஜனநாயக முறைப்படி தனது கட்சியை யும், மக்களையும் கருத்தில் கொண்டு தனது நல்ல மனநிலையை வெளிப்படுத் தும் நோக்கோடு ராஜினாமா செய்தி ருக்கின்றார். இது வரலாற்றில் முன்னு தாரணமாகும்.

இது தொடர்பில் ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வருவதற்கு இடையில் அவர் பெற்ற பட்டம் உண்மையாக இருந்தா லும் கூட அந்தப் பட்டம் உறுதிப்படுத்தப் படும் வரைக்கும் தான் விலகி இருப்பேன் என்று கூறுவது மிகப்பெரும் ஜனநாய கமாகும். அந்த வகையில் சபாநாயகர் மேற்கொண்ட விடயத்தை நாங்கள் வரவேற்கிறோம். – என்றார்.

ஏனைய தமிழ் கட்சிகளோடு பயணிப் பது தொடர்பில் பதிலளிக்கையில் –

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் இணைந்து பயணிக்கிறார் களா என்பது எனக்கு தெரியாது. ஆனால் எங்களைப் பொறுத்த வரைக் கும் எங்களுடைய மத்திய குழு மற்றும் அரசியல் குழுவிலே கலந்துரையாடி தீர்மானம் எடுக்கப்பட்டதன் பின்பாக சேர்ந்து செயல்படுதல், இணைந்து பயணிப்பது தொடர்பான விடயங்களை பற்றிப் பேசலாம்.

நாங்கள் யாரையும் வெளியில் விடவில்லை. இப்போதும் ஒற்றுமையாக பலமாக செயல்படுவதற்கான கோரிக் கைகளை முன்வைக்கின்றோம். தேர்த லுக்கு முன்னரும் பகிரங்கமாக கோரிக் கையை முன்வைத்தவர்கள் எங்களு டைய கட்சியினர்தான். நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெறுகின்ற போது எல்லா மேடைகளிலும் அதனை தெளிவாக கூறியிருக்கிறேன். எங்களுடைய கட் சியை பலப்படுத்துவதற்கும் கூட்ட மைப்பை உருவாக்கி மக்களிடம் கொண்டு செல்வதற்கான ஆணையை தாருங்கள் என்று கேட்டிருந்தேன். அந்த ஆணையை மக்கள் தந்திருக் கிறார்கள். எனினும் தனி மனிதனாக நான் அதனை செய்ய முடியாது. மத்தியகுழு மற்றும் அரசியல் குழுவின் கூட்டு முடிவின் பிரகாரம் அந்த ஒற்று மைக்கான பாலத்தையும், பயணத் தையும் மேற்கொள்வோம். – என்றார்.

# டாக்டர் எம்.கே. முருகானந்தனின் ஐந்து நூல்களின் வெளியீட்டு விழா

வைத்தியர் எம்.கே. முருகானந்தனின் ஐந்து நூல்களின் வெளியீட்டு விழா பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலை மன்றத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு எழுத்தாளர் க. பரணீதரன் தலைமையில் நடைபெற விருக்கிறது.

உறங்கும் உண்மைகள்(சிறுகதைத் தொகுதி), இரசித்த சினிமா (சினிமா கட்டு ரைகள்), மறந்துபோகாத சில (கவி தைத்தொகுதி), ஈழத்துக் கிராமியப் பாடல் கள் (கட்டுரை), வாசிப்பில் நினைந்தூ றல் (விமர்சனக் கட்டுரைகள்) ஆகிய நூல்களே ஜீவநதி பதிப்புக்களாக வெளி யிடப்படுகின்றன.

வரவேற்புரையை சி.சித்திராதரநும், வெளியீட்டுரையை எழுத்தாளர் இ.இரா ஜேஸ்கண்ணனும், கருத்துரைகளை அ. யேசுராசா, த. ஆனந்தகுமார், திருமதி கோகிலா மகேந்திரன், கு. வசீகரன், து. குலசிங்கம் ஆகியோரும் ஆற்ற ஏற் புரையும் நன்றியுரையும் வைத்தியர் எம்.கே. முருகானந்தன் நிகழ்த்து வார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்


259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## மாவை எனும் அபத்தம்

இலங்கைத் தமிழரசுக் கட்சி விடயம் எதிர்பார்க்கப்பட்டபடி சந்தி சிரிக்கும் நிலைக்கு வந்திருக்கின்றது.

நாம் ஏற்கனவே சுட்டிக் காட்டி வந்தபடி கட்சியைக் குட்டிச் சுவராக்கி, உண்டு இல்லை என்று துவம்சம் பண்ணி நாசப்படுத்தி விட்டுத்தான் ஓய்வார் போலும் இன்னும் தன்னை அக்கட்சியின் தலைவர் என்று எண்ணிக் கொண்டு கட்சியை சீரழிக்கும் வேலையை முன்னெடுக்கும் மூன்றாம் தர மனிதரான மாவை சேனாதிராஜா.

கடந்த பத்து வருடங்களில் இடையில் ஒரே ஒரு தேசிய மாநாட்டை மாத்திரம் நடத்திக் கொண்டு, கட்சியின் தலைவர் பதவியை கட்டிப்பிடித்தபடி, சண்டப்பிரசண்டம் பண்ணிக் கொண்டிருக்கின்றார் அவர்.

ஏற்கனவே 'சணம் பித்தம், சணம் வாதம்' என்பது போல நேரத்துக்கு ஒரு கதை - நாளுக்கு ஒரு நடவடிக்கை - என்று முன்னுக்குப் பின் முரணாக செயல்படும் அவர், கடைசியாக ராஜினாமா காதையையும் அப்படியே நடத்தி கட்சியை மேலும் நெருடிக்குள் தள்ளி இருக்கிறார்.

தாம் கட்சியின் தலைமைப் பதவியையும் ஏனைய பதவி நிலைகளையும் துறக்கிறார் என எழுத்து மூலம் அறிவித்து விட்டு, அந்த ராஜினாமாக் கடிதம் ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டதாக செயலாளர் அறிவித்த பின்னர், மீண்டும் வந்திருந்து கதிரையில் ஒட்டிக்கொண்டு தான்தான் தலைவர் என்று விதண்டாவாதம் பண்ணுகிறார்.

அவரின் தலைமைத்துவ குளறுபடிகளால் கட்சி ஏற்கனவே நீதிமன்ற வழக்கில் சிக்கிக் கிடக்கின்றது. தலைவராக அவர் கூட்டிய கட்சியின் தேசிய மாநாடு சந்தி சிரிக்கும் விவகாரமாக மாறி இருக்கின்றது.

நீதிமன்றத்திலேயே அவரது நடவடிக்கைகள் கேலிக்குரியனவாக அடையாளப்படுத்தப்பட்டு வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

தேசிய மாநாட்டுக்குத் தகுதி இல்லாதவர்களை எல்லாம் கூட்டி வந்து மாநாட்டையே கேலிக்கூத்தாக்கியவர் அவர்தான்.

முன்னுக்குப் பின் முரணாக நடப்பது தான் தமது அரசியலும் தலைமைத்துவ பண்பியல்பும் என்று தொடர்ந்து காட்டி வரும் மாவை சேனாதிராஜா, அதன் ஓர் அங்கமாக முதலில் ராஜினாமா செய்து விட்டு இப்போது வந்து அதை வாபஸ் பெறுகின்றார் என இழுபறிப்படுகின்றார்.

அவரது ராஜினாமா கடிதம் தொடர்பில் விளக்கம் கேட்டு பதிவுத்தபாலில் கட்சியின் செயலாளர் எழுதிய கடிதத்திற்கும், பின்னர் அதற்கு விளக்கம் வராத நிலையில் அவரது இராஜினாமா ஏற்றுக் கொள்ளப்படுவதாக கட்சியின் செயலாளர் எழுதிய அடுத்த பதிவு தபாலுக்கும் பின்னர் தாம் தமது பதவி விலகலை கை வாங்குகின்றார் என்று தெரிவிக்கும் கடிதம் ஒன்றே பழைய திகதியிட்டு கொண்டு வந்து செயலாளரிடம் ஒப்படைத்துக் குழப்பம் பண்ணுகிறார் அவர்.

வயது முதிர்ந்து, அதனால் ஏற்பட்ட மாறாட்டத்தால் முன்னுக்குப் பின் முரணாக நடந்து கொள்ளும் ஒரு நபராக பகிரங்கமாக அடையாளப்படுத்தப்படுபவர் மாவை சேனாதிராஜா.

காலையில் தமது தமிழரசுக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதாக பத்திரிகையாளர் மாநாட்டில் அறிவித்துவிட்டு, அடுத்த இரண்டு மணி நேரத்தில் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவாக மேடையில் ஏறிப் பேசினார். மாலையில் ரணிலுக்கு ஆதரவாக கருத்து வெளியிட்ட அரசியல் குளறுபடிகளின் மொத்தவடிவம் அவர் என்பது தமிழர் எல்லோருக்கும் தெரிந்த உண்மை.

பதவிகள் மீதான அவரது பேராசை அப்பட்டமான ஒன்று. தகுதிக்கு அப்பால் பதவிகளை எதிர்பார்க்கும் ஒரு மனிதராகவே அவருடைய அரசியல் கட்டவிழ்ந்து இருக்கின்றது.

எம்.பி. பதவியை பெறுவதற்காக அவர் ஆடிய அரசியல் சதிராட்டங்கள் அபத்தம் நிறைந்தவை.

இப்போது கட்சியின் தலைமைப் பதவியிலும் அதே குளறுபடிகள். முன்னுக்குப் பின் முரணான நடவடிக்கைகள்.

அவரின் பதவி வெறி நீங்க போவதில்லை. அது நீடிக்கும் வரை, கட்சியை அவர் உண்டு இல்லை என்று பண்ணி நாசமாக்கி விட்டுத் தான் ஓய்வார் போல தெரிகிறது.

மாவை கட்சித் தலைவராக இருக்கும் வரை அக்கட்சி உருப்படப் போவதில்லை என்பது நிச்சயம்.





# அன்ரன் பாலசிங்கத்தின் நினைவேந்தல் யாழில்!

தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கத்தின் 18 ஆம் ஆண்டு நினைவேந்தல் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமை அலுவலகத்தில் நேற்று மாலை நடைபெற்றது.

கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் நாடளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தலைமையில் இந்நினைவேந்தல் நடைபெற்றது.

இதன் போது அன்ரன் பாலசிங்கத்தின் நினைவாக பொதுச் சுடர் ஏற்றப்பட்டு மலர் மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இவ் நினைவேந்தல் நிகழ்வில் கட்சியின் முக்கியஸ்தர்கள், ஆதரவாளர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.







# தூக்கில் தொங்கிய நிலையில் ஆணின் சடலம் மல்வத்தையில்!

(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ் )

தூக்கில் தொங்கிய நிலையில் ஆண் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை (13) மாலை சம்மாந்துறை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தம்பிநாயகர்புரம், மல்வத்தையைச் சேர்ந்த குலசேகரன் ரவி (வயது 62) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டு மேலதிக விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




# மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களை ஜும்ஆ தினங்களில் நடத்துவதை தவிர்க்கவும்!

## உதுமாலெப்பை எம்.பி. கோரிக்கை

(அபு அலா, கே. எ. ஹமீட்)

அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் ஜும்ஆ தினங்களில் நடத்துவதில்லை என்று அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் இணைத் தலைவராக பதவி வகித்த காலத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் இன்று (13) ஜும்ஆ தினத்தில் அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் நடைபெற்றது.

இது குறித்து தனது கண்டனத்தை அம்பாறை மாவட்ட ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். உதுமாலெப்பை தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ தலைமையில் நேற்று முன்தினம் (13) நடைபெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

ஜும்ஆ தினத்தில் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் முஸ்லிம் திணைக்களத் தலைவர்களும் பல கஷ்டங்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது. எதிர் காலங்களில் ஜும்ஆ தினங்களில் ஒருங்கிணைப்பு குழுக் கூட்டங்கள் நடத்துவதை தவிர்க்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.– என்றார்.

இதற்குப் பதிலளித்த பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ, மற்றும் அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்ரம ஆகியோர் எதிர்வரும் காலங்களில் வெள்ளிக்கிழமை தினங்களில் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் நடத்தப்படுவதை தவிர்த்துக் கொள்வதாகவும், இது தொடர்பாக ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு தாங்கள் மனம் வருந்துவதாகவும் தெரிவித்தனர்.



# லொறி – மோட்டார் சைக்கிள் விபத்து: இரண்டு பேர் பலி; ஒருவர் படுகாயம்!

(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)

கற்பிட்டி, பாலாவி பிரதான வீதியில் சேத்தாபிள்ளை எனும் இடத்தில் வெள்ளிக்கிழமை இரவு (13) லொறி மற்றும் மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின.

இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த மூவரும் பலத்த காயங்களுக்கு ஆளாகிய நிலையில் புத்தளம் ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

இதன்போது இருவர் செல்லும் வழியில் உயிரிழந்துள்ளனர். ஒருவர் பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர் பாலாவியை நோக்கி பயணித்த லொறியும் நுரைச்சோலையை நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதில் விபத்து இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் மூவர் பயணித்துள்ளனர். இதில் இருவர் உயிரிழந்துள்ளனர். அவர்கள் இருவரும் 27,28 வயதை உடையவர்கள் எனவும் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.





# மேல் கொத்மலை நீர்தேக்கதில் இருந்து இனந்தெரியாத பெண்ணின் சடலம் மீட்பு!

தலவாக்கலை மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தில் நேற்று (14) சனிக்கிழமை காலை பெண்ணின் சடலம் ஒன்று ஒதுங்கி இருப்பதை அவதானித்த பிரதேச மக்கள் நீர்த்தேக்கத்தின் பாது காப்பு பிரிவு மற்றும் தலவாக்கலை பொலிஸார் ஆகியோருக்குத் தகவல் அளித்துள்ளனர்.

அதனைத் தொடர்ந்து அந்த இடத் துக்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்பதற்கான நடவடிக்கைகளை முன் னெடுத்தனர். சடலம் ஒரு பெண்ணுடை யது என அடையாளம் காணப்பட்டுள்ள அதே வேளை சடலம் தொடர்பான வேறு எந்தத் தகவல்களும் கிடைக்கவில்லை என பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசார ணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாகத் தலவாக்கலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

சடலமானது மேல் கொத்மலை நீர்த் தேக்கத்தின் நீர் வெளியேறும் வாயில் கதவுக்கு அருகாமையில் குப்பைகளு டன் ஒதுங்கி இருந்துள்ளது. நீதிவானின் விசாரணையின் பின்னர் நுவரெலியா மாவட்ட வைத்திய சாலைக்குச் சடலம் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

# இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட அரிசியில் 75 ஆயிரம் கிலோ பாவனைக்கு உதவாதது!

## உறுதி செய்தனர் உணவு, மருந்துப் பரிசோதகர்கள்

மூன்று கொள்கலன்களில் தனியார் இறக்குமதியாளர்களால் இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட சுமார் 75 ஆயிரம் கிலோ கிராம் அரிசி மனித பாவனைக்கு உகந்தது அல்ல.

இலங்கை சுங்க திணைக்களத்தின் உணவு மற்றும் மருந்துப் பரிசோதகர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

மூன்று கொள்கலன்களில் இரண்டில் இருந்த அரிசியில் வண்டுகள் காணப்பட்டன என்றும் மற்றைய கொள்கலனில் இருந்த அரிசியின் காலாவதித் திகதி உள்ளிட்ட தகவல்கள் மாற்றப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அரிசியை மனித பாவனைக்காக விடுவிக்க முடியாது என்று சுகாதார திணைக்களம் பரிந்துரைத்ததன் காரணமாகவே இந்த அரிசியை வேறு இடத்துக்கு மாற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.



# இந்திய நிதியில் சம்பூரில் காற்றாலை மின் நிலையம்

## எரிசக்தி அமைச்சின் செயலாளர் தகவல்

இந்திய நிதியுதவியுடன் சம்பூரில் 120 மெகாவோட் திறன் கொண்ட காற்றாலை மின் நிலையம் அமைக்கப்படவுள்ளது.

இந்தத் திட்டம் இந்திய மத்திய மின்சார அதிகார சபை மற்றும் இலங்கை மின்சார சபை ஆகியவற்றின் கூட்டு முயற்சியாக இருக்கும்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க டிசெம்பர் 15 முதல் 17 வரை இந்தியாவுக்கான தனது உத்தியோக பூர்வ விஜயத்தை நிறைவு செய்த பின்னர் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் என்று எரிசக்தி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் உதயங்க ஹேமபால தெரிவித்துள்ளார். இந்திய ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் இடம்பெற்ற இந்த விஜயம், ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க பதவியேற்ற பின்னர் மேற்கொள்ளும் முதலாவது வெளிநாட்டு விஜயம் என்பது குறிப்பிடத்தக்கது.



# மன்னார் மறை மாவட்டத்தின் புதிய ஆயராக அருட்தந்தை எஸ்.ஞானப்பிரகாசம் அடிகளார்

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார் மறை மாவட்டத்தின் புதிய ஆயராக மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த அருட்தந்தை எஸ்.ஞானப் பிரகாசம் அடிகளார் திருத்தந்தையால் நியமிக்கப்பட்டுள்ளார்.

மன்னார் மறைமாவட்ட ஆயராக மடு திருத்தலத்தின் பரிபாலகர் அருட் தந்தை எஸ்.ஞானப்பிரகாசம் அடிகளார் திருத்தந்தையால் நியமிக்கப்பட்டு, அந்தச் செய்தியை திருத்தந்தையின் இலங்கைக்கான பிரதிநிதி ஊடாக மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்ட கைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இந்த நிலையில் இன்றைய தினம் சனிக்கிழமை (14) மாலை 4.15 மணி யளவில் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர் னாண்டோ ஆண்டகையால் மன்னார் மறை மாவட்டத்தின் புதிய ஆயராக மடு திருத்தலத்தின் பரிபாலகர் அருட் தந்தை எஸ்.ஞானப்பிரகாசம் அடிகளார் திருத்தந்தையால் நியமிக்கப்பட்ட அறிவிப்பை அறிவித்தார்.

இதனையடுத்துப் பேராலயத்தின் மணியோசை எழுப்பப்பட்டது.

இதன் போது மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர், மறை மாவட்ட அருட் தந்தையினர், அருட்சகோதரிகள் கலந்து கொண்டிருந்தனர்.

மன்னார் மறைமாவட்டம் உருவாகி 43 வருடங்களை கடக்கும் நிலையில் மன்னார் மறை மாவட்டத்தைச் சேர்ந்த அருட்தந்தை எஸ்.ஞானப்பிரகாசம் அடிகளார் முதல் ஆயராக திருத்தந்தை யால் நியமிக்கப்பட்டுள்ளார்.

மன்னார் மறை மாவட்டத்தின் தற் போதைய ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தனது 75 வது வயதில் ஓய்வு பெற்றுச் செல்ல உள்ள நிலையில் மன்னார் மறை மாவட்டத்தின் புதிய ஆயராக அருட் தந்தை எஸ்.ஞானப்பிரகாசம் அடிகளார் நியமிக்கப்பட்டுள்ளார்.









# அரிசி அரசியல்...!

அரிசி விலை தெரியவில்லை, அரசியல் பேச வந்து விட்டீர்கள் என சாமானிய மக்கள் மத்தியிலே ஒரு நகைச்சுவை உரையாடல் உண்டு.

இலங்கையர்கள் மத்தியிலே சோறு என்பது தவிர்க்க முடியாத ஒன்று. ஆங்கிலேயர்களின் வருகைக்கு பின்னர் வடக்கிலே மாப்பொருள் உணவுகள் அதிகம் பாவனையில் உண்டு. அதேபோல் மலையகப் பகுதியிலும் கோதுமை மாவின் பயன்பாடு அதிகம். நாட்டில் உள்ள ஏனைய பகுதிகளில் சோறுதான் பிரதான உணவாகிறது. சிங்களவர்கள் மத்தியில் இதன் பயன்பாடு என்பது உச்சப்பட்சமானது. சோறும் சம்பலும் அவர்களின் இணை பிரியாத உணவு. தென்னாசிய மக்களின் அதிக பாவனையும் அரிசிதான். அதிலிருந்துதான் ஏனைய உணவுகளையும் தயாரிக்கிறார்கள்.

நெல் உற்பத்தி காலங்களில் குறைந்த விலையில் நெல்லைக் கொள்வனவு செய்து கூடிய விலையில் அரிசியை சந்தையில் விற்பனை செய்கின்ற நிலைப்பாடு தொடர்ச்சியாகவே காணப்படுகிறது. பல நெருக்கடிக்கு மத்தியில் விவசாயத்தில் ஈடுபடுகின்ற விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். காலத்துக்கு காலம் அரசு உத்தரவாத விலைகளை நிர்ணயித்தாலும்



அதனைப் பெருவணிகர்கள் கண்டு கொள்வதே இல்லை. அரசும் இந்த விடயத்தில் சட்டத்தை உபயோகிப்பதும் இல்லை. கொள்வனவு செய்யப்படும் நெல்லை தமது விருப்பின் அடிப்படையில் விலையை தாங்களே நிர்ணயித்துக் கொண்டு, அரிசி விநியோகத்தை மில் உரிமையாளர்கள் மேற்கொள்கின்றனர். இதில் மிகப்பெரிய அரிசி உற்பத்தி ஆலைகளை நடத்துபவர்கள் தங்கள் விருப்பப்படி விலை நிர்ணயத்தையும் ஏற்படுத்துகின்றனர். இதுவும் ஒருவகை மாபியாவே. கடந்த ஜனாதிபதி தேர்தல் முடிவுற்ற பின்னர் சில தினங்களிலே பிரதான அரிசி விநியோக முகவர் தனது உற்பத்தியை விலையை குறைத்து விற்பனையில் ஈடுபட்டார். இதற்கு பின்னால் ஏதோ ஓர் அரசியல் சூட்சுமம் இருக்கிறது என்பதனை புதிய ஜனாதிபதியும் உணரவில்லை. அதன் விளைவை இப்பொழுது உணர்ந்திருப்பார் என்று நம்பலாம். எதிர்க்கட்சியில் இருக்கும் பொழுது அரிசி இறக்குமதியை அரசு செய்யத் தேவையில்லை, அதை புறக்கோட்டை வர்த்தகர்களே பார்த்துக் கொள்வார்கள் என பேசிய இன்றைய ஜனாதிபதி தானும் அதே புறக்கோட்டை வர்த்தகர்கள் செய்யும் வேலையில் ஈடுபடுகிறார்.



வி.எஸ்.சிவகரன்

குறைந்தது நாற்பது வீதத்திற்கு மேல் அரிசி இறக்குமதி காணப்பட்டது. அண்மையில் வெள்ளப்பெருக்கின் மூலம் கணிசமான வயல் நிலங்கள் அழிவடைந்ததால் குறைந்தது 60 தொடக்கம் 70 வீதமான அரிசியை இறக்குமதி செய்ய வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுள்ளது. அவ்வாறு தொடர்ந்து அரிசியை இறக்குமதி செய்யக்கூடிய நிலையில் நாட்டின் பொருளாதாரம் வலுவாக இருக்கிறதா என்ற கேள்வி உண்டு. அரிசி மட்டுமல்ல, தேங்காய், உப்பு இரண்டுக்கும் உள்ளூரில் தட்டுப்பாடு ஏற்படலாம் என எதிர்வு கூறப்படுகிறது. இதில் தென்னை மரங்களுக்கு அதிகமான நோய் தாக்கம் ஏற்பட்டுள்ளதால் தேங்காய் உற்பத்தி மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. அதிகமான நோய் தாக்கம் ஏற்பட்டு உற்பத்தி வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலை கடந்த ஓராண்டாகத் தொடர்கின்றது. விவசாயத் திணைக்களம், தெங்கு அபிவிருத்தி உற்பத்தித் திணைக்களம் இதில் பெரும் சிரத்தை கொள்ளவில்லை. அதனால் தென்னை மரங்கள் வெற்றுமரங்களாக காணப்படுகின்றன. குரங்கு, மரஅணில் போன்றவைகளாலே தாக்கம் ஏற்படுவதாக அரசாங்கம் கூறுகின்றது. ஆனால் தென்னை ஓலைகளிலே பச்சயத்தை உணவாக உட்கொள்ளும் வெள்ளைப் பூச்சி தென்னை மரத்திலும்

தொடர்ச்சி▼





# அரிசி அரசியல்...!

**தொடர்ச்சி▲**

பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. விரிந்த தென்னம்பாளைகளில் அதிகளவான எறும்புகள் சூழ்ந்து குரும்பை பிடிப்பதை இல்லாமல் செய்கின்றன. அரசாங்கமோ, அதிகாரிகளோ இதற்கு உரிய தடுப்பு நடவடிக்கை எடுப்பதாக இல்லை.

ஒழுங்கான முகாமைத்துவமின்மையால் உப்பு உற்பத்தியும் கணிசமாக வீழ்ச்சி அடைந்துள்ளது. அதனால் உப்புத் தட்டுப்பாடும் ஏற்பட போவதாக கூறுகின்றனர். இந்த மூன்று பொருள்களும் நாளாந்த வாழ்வியலில் மிக அவசியமானவை. இலகுவாக இந்த மூன்று விடயத்தையும் தீர்த்துக் கொள்ளக் கூடிய வாய்ப்பு குறைவு. நெல் உற்பத்தியை அதிகரிக்க கூடிய ஏதுவான காலநிலை தற்பொழுது சீரின்மையால் அது பாதிக்கப்படலாம். தென்னை மரங்களை நோய் தாக்கத்திலிருந்து விடுவிப்பதற்குரிய நடவடிக்கையை தற்போது தொடங்கினாலும் இன்னும் ஆறு மாதங்களுக்கு மேல் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்படலாம். உப்பு உற்பத்தியும் அப்படியே. இதுவரை ஆட்சியில் இருந்த கட்சிகள் பொருளாதாரக் கொள்கையை ஒழுங்கு முறையாக கடைப்பிடிக்காததன் விளைவே நாட்டின் பொருளாதார சீர்கேடு என மணிக்கணக்காக விமர்சனம் செய்த ஜேவிபினர் இப்போது என்ன செய்வது என்று தெரியாமல் திணறுகின்றனர். பசி வந்தால் பத்தும் பறந்து விடும் என்பது போல் அதனை கட்டுப்படுத்த முடியாது. ஒருவனுக்கு உணவில்லையேல் இந்த ஜகத்தினை அழித்து விடுவோம் என்றான் பாரதி. இது நாடு முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தலாம். அரிசி அரசியல் என்பது மிகவும் உச்சமானது. பொருளாதார நிலைமைகளைப் புரிந்து கொண்டு அதன் அடிப்படையில் வரவு - செலவை வரையறுத்து வாழ்வை நகர்த்த வேண்டிய நிர்ப்பந்தம் மக்கள் மத்தியிலே உண்டு. ஆடம்பர வாழ்க்கை கடந்து சாதாரண கூலி தொழிலாளர்களின் உயர்ந்த பட்ச உணவே சோறுதான். அதற்கு கூட தட்டுப்பாடு என்றால் நிலைமை எப்படி இருக்க போகிறது? இந்த மூன்றையும் தொடர்ந்து இறக்குமதி செய்யக்கூடிய நிலைமையில் நாட்டின் பொருளாதாரக்கட்டமைப்பு காணப்படுமா? இணைய அத்தியாவசிய பொருள்களை இறக்குமதி செய்ய வேண்டிய அவசியமும் காணப்படும். இந்தச் சூழலில் அரசு மிக மோசமான நெருக்கடியை எதிர் கொள்ளப் போகிறது.

1965 ஆம் ஆண்டு தேர்தல் களத்திலே ஐக்கிய தேசியக் கட்சி ஒரு கிலோ அரிசி 10 சதத்துக்கு வழங்கப் போகிறோம் என தேர்தல் வாக்குறுதி அளித்தது. ஆனால் சிறிலங்கா சுதந்திரக்கட்சியை சேர்ந்த திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்கா ஒரு கிலோ அரிசியை 01 சதத்துக்கு வழங்குவேன் என உத்தரவாதம் வழங்கினார். எப்படி 01 சதத்துக்கு அரிசியை வழங்க முடியும் என கேட்டவர்களுக்கு சந்திர மண்டலத்தில் இருந்தாவது அரிசியை கொண்டு வந்து கொடுப்பேன் என்றார். இவ்விதமான ஒரு பொருளாதார நெருக்கடி பாணுக்கு வரிசையில் நின்ற காலம் சிறிமாவின் ஆட்சியிலும் ஏற்பட்டது. ஆனாலும் விவசாய உற்பத்தியிலும் உள்ளூர் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதிலும் அந்த அரசு அதிசிரத்தை காட்டியது. அதனால் வடக்கில் விவசாய செய்கையில் பெரும் புரட்சி ஏற்பட்டது. பலர் கோடீஸ்வரர்களாக உயர்ந்தனர்.



இந்தியாவின் மகாராஷ்டிராவில் தக்காளி பழம் விலை உயர்வால் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. டெல்லியிலே வெங்காய விலை உயர்வால் ஆட்சி மாற்றம் நிகழ்ந்தது. தமிழகத்தில் அதிக மின் தடையால் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. இப்படி உலகில் பல பகுதிகளில் உணவு தட்டுப்பாட்டால் அதிகார சாம்ராஜ்யங்கள் அகற்றப்பட்ட வரலாறுகள் உண்டு.

அரசாங்கம் விவசாய இயந்திரங்களுக்கும், உள்ளீடுகளுக்கும் இறக்குமதி தீர்வையை அறவிடாமல் விவசாயத்தை ஊக்குவிக்க வழிவகை மேற்கொள்ள வேண்டும். இல்லையேல் உணவுத் தட்டுப்பாடு என்பது தவிர்க்க முடியாத ஒன்றாக மாறிவிடும். வறுமையும், பசியும் எதற்கும் அஞ்சாது என்பது கோட்டபாய ராஜபக்ஷவை ஆட்சியில் இருந்து அகற்றுவதற்காக முன்னெடுக்கப்பட்ட போராட்டங்கள் கோடி காட்டி இருந்தன. நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு உள்ளூர் உற்பத்தியை அதிகரிப்பதே தன்னிறைவான பொருளாதாரக் கட்டமைப்பை உருவாக்க வல்லது. தற்போதைய அரிசியின் நிர்ணய விலை நடைமுறையில் இல்லை. கட்டுப்பாட்டு விலையை விட இருபது ரூபா அதிகரித்தே சம்பா அரிசி விற்பனையாகிறது. இதுவரை எவருக்கும் நடவடிக்கை எடுத்ததாக இல்லை. முன்னாள் ஜனாதிபதிகள் மைத்திரி, போட்டபாய அடிக்கடி விலை நிர்ணயம் செய்து வர்த்தமானி வெளியிட்டது போன்ற நிலை உருவாகப்போகிறதா? இறக்குமதி என்பது தங்கியிருத்தல் நிலைப்பாட்டை மேலும் வலுப்படுத்தும். பொருளாதாரத்தில் நலிவுற்ற நாடாகவே தொடர்ந்து நீடிக்கக்கூடிய நிலை உருவாகிவிடும். கல்லாநிதிகளை வைத்து பொருளாதாரப் புரட்சியை ஏற்படுத்த முடியுமா? முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியது போல் எல்போர்ட் அரசாங்கம் என்ன செய்யப் போகிறது.?



# ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் உடலுக்கு தலைவர்கள், காங்கிரஸ் தொண்டர்கள், பொதுமக்கள் அஞ்சலி

காங்கிரஸ் மூத்த தலைவரும், ஈரோடு கிழக்கு தொகுதி எம்.எல்.ஏ.வுமான ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் உடலுக்கு தலைவர்கள், காங்கிரஸ் நிர்வாகிகள், தொண்டர்கள், பொதுமக்கள் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

காங்கிரஸ் மூத்த தலைவரும், ஈரோடு கிழக்கு தொகுதி எம்.எல்.ஏ.வுமான ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் (வயது 76) சென்னையில் நேற்று சனிக்கிழமை காலமானார். உடல்நலக் குறைவு காரணமாக சென்னை மணப்பாக்கத்தில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் மறைவு செய்தி அறிந்ததும் தமிழக காங்கிரஸ் தலைவர் கு.செல்வபெருந்தகை மற்றும் கட்சி நிர்வாகிகள் மியாட் மருத்துவமனைக்கு விரைந்தனர். கட்சித் தொண்டர்களும், மக்களும் திரண்டனர். இளங்கோவன் மறைவு செய்தியறிந்து தொண்டர்கள் மிகுந்த வேதனையடைந்தனர்.

மருத்துவமனையில் இருந்து மணப்பாக்கத்தில் உள்ள இல்லத்துக்கு ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் உடல் எடுத்துச் செல்லப்பட்டு பொது மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. அங்கு அவரது உடலுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் துரைமுருகன், மா.சுப்பிரமணியன், தா.மோ.அன்பரசன், எம்.பி. தயாநிதி மாறன், மதிமுக பொதுச் செயலாளர் வைகோ உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினர்.

தமிழக காங்கிரஸ் தலைவர் கு.செல்வபெருந்தகை, காங்கிரஸ் மூத்த தலைவர்கள் கே.வி.தங்கபாலு, சு.திருநாவுக்கரசர், கிருஷ்ணசாமி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன், இந்திய கொம்யூனிஸ்டு கட்சி மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தேசியத் தலைவர் காதர் மொய்தீன், பாஜக தேசிய செயற்குழு உறுப்பினர் நடிகை குஷ்பு, அதிமுக முன்னாள் அமைச்சர் டி.ஜெயக்குமார் உள்ளிட்டோர் மாலை அணிவித்து இறுதி அஞ்சலி செலுத்தினர். காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வபெருந்தகை வெளியிட்ட அறிக்கையில், “ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், ஒரு வாரம் துக்கம் அனுசரிப்பதோடு, தமிழகம் முழுவதும் காங்கிரஸ் கட்சியின் கொடிகள் அரைக்கம்பத்தில் பறக்க விடப்படும். இன்று மாலை சுமார் 4.00 மணியளவில் முகலிவாக்கம் எல் அண்டி காலனி பகுதியில் அமைந்துள்ள மின் மயானத்தில் அவரது உடல் தகனம் செய்யப்படும்.” என்று தெரிவித்துள்ளார்.

# விசைப்படகு மூழ்கியதால் தவித்த இராமேசுவரம் மீனவர்கள் 7 பேர் மீட்பு



வங்கக் கடலில் ஏற்பட்ட குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி மற்றும் கனமழையால் கடந்த 5 நாள்களாக இராமேசுவரம் மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை. இந்நிலையில், நேற்று முன்தினம் மீனவர்கள் மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டனர். இராமேசுவரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து 471 விசைப்படகுகள் நேற்று மீன்பிடிக்கச் சென்றன.

இந்நிலையில், மணிவண்ணன் என்பவருக்குச் சொந்தமான விசைப் படகில் 7 மீனவர்கள் கடலுக்குச் சென்றனர். கரையிலிருந்து 2 நாட்டிக்கல் மைல் தொலைவு சென்றபோது, திடீரென பலகை உடைந்து, படகுக்குள் தண்ணீர் புகுந்தது. உடனடியாக, மீனவர்கள் செல்போன் மூலம் கரையில் இருந்த மீனவர்களுக்கு தகவல் தெரிவித்தனர்.

இதையடுத்து, நாட்டுப் படகில் சென்ற மீனவர்கள் விசைப்படகில் இருந்த 7 மீனவர்களையும் பத்திரமாக மீட்டு, கரைக்கு அழைத்து வந்தனர். விசைப் படகு கடலில் மூழ்கியதால், அதை அங்கேயே விட்டுவிட்டு வந்துவிட்டனர்.

கடலுக்குச் செல்லும் மீனவர்கள் தவறாது பாதுகாப்பு உபகரணங்கள், தக்க ஆவணங்களை எடுத்துச் செல்ல வேண்டும். இந்திய கடல் எல்லையைத் தாண்டி மீன்பிடிக்கச் செல்லக் கூடாது என்று மீன்வளத் துறை உதவி இயக்குநர் அறிவுறுத்தியுள்ளார்.





# ஜோர்ஜியா அரசாங்கத்தின் அமைச்சர்கள் உள்ளிட்ட 20 பேருக்கு விசா கட்டுப்பாடு விதித்தது அமெரிக்கா

நாட்டின் ஜனநாயகத்தை குறைத்து மதிப்பிடும் வகையில் செயல்படுவதாக ஜோர்ஜியா அரசாங்கத்தின் அமைச்சர்கள் உள்ளிட்ட 20 பேருக்கு விசா கட்டுப்பாடு விதித்திருப்பதாக அமெரிக்க வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

விசா வழங்குவதில் இருந்து தடை செய்யப்படும் அதிகாரிகளின் பெயர்கள் குறிப்பிடப்படவில்லை, ஆனால் இதில் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்ட அமலாக்க மற்றும் பாதுகாப்பு சேவை ஊழியர்கள் மற்றும் தனியார் நபர்கள் உள்ளடங்குகின்றனர் என அமெரிக்க வெளியுறவுத்துறை குறிப்பிடுகிறது.

மேலும் ஜார்ஜியாவில் ஜனநாயகத்தை குறைமதிப்பிற்கு உட்படுத்துபவர்களை பொறுப்பேற்க, பொருளாதார தடைகள் உட்பட கூடுதல் நடவடிக்கைகளை தயார் செய்து வருவதாகவும் வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது.

முன்னதாக ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைவது குறித்த பேச்சுவார்த்தையை 2028 ஆம் ஆண்டு வரை ஒத்தி வைப்பதாகவும், எனவே ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி உதவியை நிராகரிப்பதாகவும் ஜார்ஜியா பிரதமர் இராக்லி கோபாகிட்சே அறிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தென்கொரிய ஜனாதிபதிக்கு எதிராக குற்றப்பிரேரணை நிறைவேற்றப்பட்டது






தென்கொரிய ஜனாதிபதி யுன் சுக் யோலுக்கு எதிராக அந்நாட்டு எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த இரண்டாவது குற்றப் பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பான வாக்கெடுப்பு நேற்று காலை இடம்பெற்றதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த டிசம்பர் 3 ஆம் திகதி இரவு திடீரென இராணுவச் சட்டம் அமுலாக்கப்பட்டதன் அடிப்படையில் தென்கொரிய எதிர்க்கட்சிகள் ஜனாதிபதி யுன் சுக் யோலுக்கு எதிராக ஒரு குற்றப் பிரேரணையை கொண்டு வந்தன.

எனினும், ஜனாதிபதியை பிரதிநிதித்துவப்படுத்தும் ஆளும் மக்கள் சக்தி கட்சியினர் வாக்கெடுப்பை புறக்கணித்து, நாடாளுமன்றத்தை விட்டு வெளிநடப்பு செய்ததன் காரணமாக முதலாவது குற்றப் பிரேரணை தோற்கடிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் இரண்டாவது முறையாக ஜனாதிபதியை பதவி நீக்கம் செய்ய எதிர்க்கட்சிகள் நடவடிக்கை எடுத்தன.

அங்கு தென்கொரிய நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து உறுப்பினர்களும் தமது வாக்குகளை பயன்படுத்தியதோடு 204 உறுப்பினர்கள் பதவி நீக்கத்திற்கு ஆதரவாக வாக்களித்திருந்தனர்.

பதவி நீக்கத்திற்கு எதிராக 85 வாக்குகள் மட்டுமே கிடைத்துள்ளன.

அதன்படி, தென்கொரிய ஜனாதிபதி யுன் சுக் யோலுக்கு எதிரான பதவி நீக்கம் இன்று அந்நாட்டு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இதன்படி, தற்போதைய ஜனாதிபதி பதவியில் இருந்து நீக்கப்படுவதால், பிரதமர் பதில் ஜனாதிபதியாக செயற்படுவார்.




# இன்றைய ராசி பலன்கள் - 15.12.2024




இன்று உங்கள் விருப்பத்துக்கு ஏற்ப முக்கிய முடிவுகளை உங்களால் எடுக்க இயலும். உங்கள் தன்னம்பிக்கை அதிகமாகக் காணப்படும். நீங்கள் எதையோ சாதித்ததபோல் உணர்வீர்கள்.

கடின உழைப்பும் அர்ப்பணிப்பும் உங்களுக்கு வெற்றியைப் பெற்றுத்தரும். உங்களுள் இருக்கும் திறமைகளை பணியிடத்தில் வெளிபடுத்துவீர்கள்.

உங்களின் நேர்மையான அணுகுமுறை காரணமாக உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். இந்தப் போக்கின் காரணமாக உறவின் பிணைப்பு வலுப்படும். மனம் திறந்து பேசுவதன் மூலம் இருவரிடையே இருக்கும் இடைவெளி குறையும்.

இன்று நிதிநிலை உங்களுக்கு சாதகமாக இருக்கும்.




இன்று வளர்ச்சி குறைந்து காணபடும். உங்கள் பணிகளை விரைவாக ஆற்ற இயலாத நிலை காணப்படும். இன்று சோம்பலும் மந்தத் தன்மையும் காணப்படும்.

இன்று கொடுக்கப்பட்ட பணிகளை முடிக்க இயலாத நிலை காணப்படும். பணிகள் அதிகமாக காணப்படுவதே இதற்கு காரணமாக இருக்கும். எனவே பணிகளை திட்டமிட்டு முறையாக கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் நல்லுறவு காணப்படாது. புரிந்துணர்வின்மை காரணமாக தேவையற்ற கருத்து வேறுபாடு எழும்.

இன்று அதிர்ஷ்டம் உங்களுக்கு கை கொடுக்காது. இதனால் கூடுதல் பணம்சம்பாதிக்கும் பல வாய்ப்புகளை இழப்பீர்கள்.




உங்கள் மனதில் இருக்கும் குழப்பம் காரணமாக இன்று சிறிது அமைதியின்மை காணப்படும். இது உங்கள் முடிவெடுக்கும் திறமையை பாதிக்கும்.

உங்கள் பணிகளை ஆற்றும் போது கவனம் தேவை. இல்லாவிடில் தவறுகள் நேர வாய்புள்ளது. இது சிக்கலுக்கு வழிவகுக்கும்.

உங்கள் துணையுடன் தவறான புரிந்தணர்வு காணப்படும். இதனால் வாக்கு வாதங்கள் ஏற்படும். இத்தகைய சூழ்நிலையை தவிர்ப்பது நல்லது.

இன்று பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது. திட்டமிடலின்மை காரணமாக நீங்கள்சில பிரச்சினைகளை சந்திக்க நேரும். இன்று சுறுசுறுப்பாக இருக்க வேண்டியது அவசியம்.

இன்று உங்களால் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிக்க இயலாது.




இன்று நீங்கள் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் நீங்கள் எதையோ இழந்தது போல உணர்வீர்கள்.

உங்கள் சக பணியாளர்களிடமிருந்து சில பிரச்சினைகளை சந்திப்பீர்கள். காரணமேயில்லாமல் அவர்கள் உங்கள் மீது பழி போடுவார்கள். இது உங்கள் வளர்ச்சியில் தடையை ஏற்படுத்தும்.

உங்கள் துணையுடன் தேவையற்ற தவறான புரிந்துணர்வு கொள்வீர்கள். இதனை மாற்றிக் கொள்வது சிறந்தது.

இன்று பணபுழக்கம் குறைந்து காணப்படும் அதிர்ஷ்டமும் குறைந்து காணப்படும். எனவே உங்கள் செலவுகளை முறையாகத் திட்டமிட்டுச் செய்யவும்.

அதிக வெப்பம் காரணமாக தோலில் எரிச்சல் ஏற்படும்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்கும். நீங்கள் நல்ல மனநிலையில் காணப்படுவீர்கள். நல்லது நடக்கும் என்ற உணர்வுடன் இருப்பீர்கள்.

உங்கள் பணியில் தொழில் சார்ந்த அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இந்தப் போக்கு உங்களுக்கு அதிர்ஷ்டத்தை அளிக்கும்.

உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்லுறவு காணப்படும்.

இன்று உங்களுக்கு ஊக்கத்தொகை போன்ற வகையில் கூடுதல் பணம் கிடைக்கும். இது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும். இதனால் உங்கள் சேமிப்பு உயரும்.

உங்களிடம் காணப்படும் உற்சாகம் காரணமாக நீங்கள் ஆற்றலுடன் காணப்படுவீர்கள். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று அமைதியின்மை காரணமாக உங்களிடம் உறுதியும் தைரியமும் குறைந்து காணப்படும். இது உங்கள் வளர்ச்சியை பாதிக்கும். உங்கள் இலக்குகளை அடைய நீங்கள் கவனமாக இருக்க வேண்டியது அவசியம்.

இன்று உங்கள் பணியில் சிக்கல்கள் காணப்படும் என்பதால் கவனமாகப் பணியாற்ற வேண்டும். இது மேலதிகாரிகளின் கவனத்துக்குச் செல்ல வாய்ப்பிருப்பதால் கவனம்.

உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு ஏற்படும். இதனால் இடைவெளி உண்டாகும். எனவே நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

இன்று செலவுகள் அதிகமாக காணாப்படும்.




இன்றைய நாள் உங்கள் பொறுமையைச் சோதிக்கும். எனவே இன்று சகஜமாக இருக்க வேண்டும். அதன் மூலம் இன்றைய நாளைச் சிறப்பாக ஆக்கலாம்.

பணியிடத்தில் பணிகள் இறுக்கமாக காணப்படும். உங்களிடம் நிறைய எதிர்பார்ப்பார்கள். என்றாலும் சில கட்டுப்பாடுகள் காரணமாக நீங்கள் உங்கள் இலட்சியத்தை அடைய இயலாது.

உங்கள் துணை உங்கள் அன்பை சரியாக புரிந்து கொள்ள மாட்டார். நீங்கள் உங்கள் அன்பில் நேர்மையாக இருந்தாலும் அதனை உங்கள் துணை சரியாக புரிந்து கொள்ள மாட்டார்.

இன்று உங்களால் செலவுகளை கட்டுபடுத்த இயலாது. எனவே சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.




இன்றைய நாள் கடினமாக இருக்கும். உங்களிடம் பதற்றம் காணப்படும். பிரார்த்தனை மற்றும் வழிபாடு சிறந்த பயனளிக்கும்.

பணிகள் அதிகமாகவும் நேரம் குறைவாகவும் காணப்படும். இதனால் உங்களுக்கு பதற்றம் உண்டாகும். பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது.

உங்கள் துணையுடன் தேவையற்ற சண்டைகள் ஏற்படும். கருத்து வேறுபாடு ஏற்படாமல் தடுக்க அவருடன் அனுசரித்துச் செல்வது சிறந்தது.

அதிக பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற உங்கள் இலட்சியம் அவ்வளவு எளிதானதல்ல. பணம் வந்தாலும் தேவையற்ற செலவுகள் காரணமாக நீங்கள் பணத்தை பராமரிக்க இயலாது.

பதற்றம் காரணமாக முதுகு வலி ஏற்படலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 15.12.2024




நீங்கள் இன்று விரைந்து பணியாற்று வீர்கள். கடினமான பணிகளையும் மேற்கொள்வீர்கள். உங்கள் இலக் குகளை அடைந்து திருப்தியடைவீர்கள்.

பணியிடச் சூழல் சுமூகமாக இருக்கும். சக பணியாளர்கள் மற்றும் மேலதிகா ரிகளின் ஆதரவு கிடைக்கப் பெறுவீர்கள். இதன் மூலம் பணியில் சாதிப்பீர்கள்.

இன்று பக்குவமும் புரிந்துணர்வும் கொண்டதன் காரணமாக உங்கள் துணையுடன் நல்லுறவு கொண்டிருப்பீர்கள். இதனால் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

உங்களின் முயற்சி காரணமாக இன்று அதிக பணம் சம்பாதிப்பீர்கள். கணிசமான தொகை சேமிப்பீர்கள்.

பக்தியும் பிரார்த்தனையும் உங்களை மகிழ்ச்சியான மனநிலையில் வைத்திருக்கும். இதனால் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.




இன்று சில பிரச்சினைகளைச் சந்திக்க நேரும் என்பதால் பொறுமையும் மன உறுதியும் அவசியம். சிக்கலான சூழ்நிலையை சமாளிக்க நேர்மறையான எண்ணங்கள் அவசியம்.

உங்கள் சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளிடம் நல்லுறவு பராமரிக்க முடியாது. மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. இதனால் சிறிது குழப்பம் ஏற்படும்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது. இதனால் நல்ல மன நிலையும் புரிந்துணர்வும் காணப்படும்.

இன்றி நிதிநிலை சாதகமாக இருக்காது. இன்று அதிகரிக்கும் செலவுகள் காரணமாக நீங்கள் கடன் வாங்க நேரலாம்.

மனக் குழப்பம் காரணமாக ஆரோக்கியக் குறைபாடு காணப்படும்.




நீங்கள் எந்த செயலை செய்தாலும் அதனை பொறுப்புடன் செய்வீர்கள். இதனால் வளர்ச்சியும் வெற்றியும் எளி தாகப் பெறுவீர்கள். இன்று முக்கிய முடிவுகளை எடுக்கலாம்.

உங்கள் பணிகளை சாமர்த்தியமாக செய்வீர்கள்.தொழில் சார்ந்த அணுகுமுறை மேற்கொள் வீர்கள். பணிகளை எளிதாக முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் சகஜமான அணுகுமுறை மேற்கொண்டு நல்லுறவை ஏற்படுத்துவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்றைய நாளை அதிக முயற்சி எடுக்க பயன்படுத்திக் கொள்ளுங்கள். இன்று ஊக்கத் தொகை கிடைக்க வாய்ப்புள்ளது.

இன்று அதிக ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.




இன்று சிக்கல் நிறைந்த நாளாகக் காணப்படும். வளர்ச்சி குறைந்து காணப் படும். இதனால் இன்று ஏமாற்றங்களும் நிறைந்து காணப்படும்.

உங்கள் சக பணியாளர்களிடம் அகந் தைப் போக்கை காண்பிப்பீர்கள். உங்கள் வளர்ச்சி குறித்து அவர்கள் சிறிது பொறாமைப்படுவார்கள்.

உங்கள் துணையுடன் சுமூகமான உறவு காணப்படாது. நல்லுறவை பராமரிக்க சகஜமான அணுகுமுறை மேற கொள்ள வேண்டும்.

இன்று பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. பணத்தை கவனமாகக் கையாள வேண்டும். சேமிப்புக் குறைந்து காணப்படும். இன்று நிதி குறித்த எந்த முடிவையும் எடுக்க வேண்டாம். உயரழுத்தம் மற்றும் பதற்றம் கார ணமாக தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது.





